IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
C.O.S.No.1/2025
Deposition of Witness for DW.1

Name : திரு. விஜீசன் ராஜ்
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 28.03.2026.

<u>சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.</u>

<u>முதல் விசாரணை</u>

இந்த வழக்கின் பிரதிவாதி எனது மனைவி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். வாதி மற்ற நபர்களுடன் என்னையும் எனது மகனையும், அவதூறாக ஏசியும், ரூ.1,00,000/- தருவார் அதை வைத்து வழக்கு தாக்கல் செய்து எனது மனைவியை வீடு கட்ட விடாமல் தடை பண்ண வேண்டும் என்று பேசிய பதிவுகள் கொண்ட வீடியோ மற்றும் ஆடியோ CD தாக்கல் செய்கிறேன். அது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. (இந்திய சாட்சிய சட்டம் 65B ன் படி சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்பதாலும், அவ்வாறு வீடியோ எடுத்த செல்போனை தாக்கல் செய்து, வீடியோ பதிவு செய்த நபரின் மூலமாக CD குறியீடு செய்யப்படவில்லை. என்றும், Commercial Courts Act Order-XI, Rule-6 (4) ன் படி Declaration தாக்கல் செய்யப்படவில்லை என்பதாலும், வாதி தரப்பில் ஆட்சேயபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.